சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**வழக்கு எண். MCOP 24/2016 - PW2**

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ம் நாள் புதன்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.2 இன் வாக்குமூலம் ஆக்ட் 10/1873 ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை-II என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | தொழில் | |
| தந்தை பெயர் | கதிர்வேல் | ஜாதி | |
| கிராமம் | பையூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 53 |

**08.10.2025 முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. .என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான்.

**குறுக்கு விசாரணை**

1. என் சொந்த ஊர் பையூர் ஆகும். ரகுபதியை எனக்கு விபத்துக்கு பிறகுதான் தெரியும். விபத்தில் யாருக்கு காயம் ஏற்பட்டது என்றால், நான் வடுகசாத்து ரோட்டில் இருந்து ஆரணி நோக்கி நடந்து சென்றுக்கொண்டிருந்தேன். கடந்த 28.02.2016 ம் தேதி காலை 6.30 மணியளவில் சென்றபோது இரு சக்கர வாகனத்தில் ஒரு பாப்பா ஓட்டிச்சென்றது. அதில் ஒரு அம்மா அமர்ந்து சென்றார். அவர்களை எனக்கு தெரியுமா என்றால் அந்த பாப்பாவின் பெயர் தெரியாது. அடிப்பட்ட அந்த அம்மாவின் பெயர் பார்த்திமா ராணி என்று தெரிந்து கொண்டேன்.

2. நான் கட்டிட மேஸ்திரி வேலை செய்கிறேன். இந்த விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் விபத்தை நேரடியாக பார்த்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரகுபதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.